## 6.0 இறையடியார்கள்

- நாயன்மார்களதும் அருளார்களதும் வாழ்வினை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகுவார்.


திருஞானசம்பந்தர்

i). திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ட கதையை முழுமையாக மெய்ப்பாடுகளுடன் கூறி (பெற்றோர் ) அவதானமாக செவிமடுக்கவும், இரசிக்கவும் வழிநடாத்துக.
( சைவநெறி பாடநூல் பக்கம் 35 )

ii). கதையில் வரும் பாத்திரங்களை ஏற்று நடித்துக் காட்ட வழிப்படுத்துக.

iii). கதையை பிள்ளை முழுமையாக கூறவும் வழிப்படுத்துக.

iv). எல்லா உயிர்களையும் படைத்துக் காப்பவர், அருள் செய்பவர், இறைவனே என்பதை வலியுறுத்தி ஏற்றுக் கொள்ள வழிப்படுத்துக.

v). கீழ்வரும் வினாக்களுக்கு விடை கூறவும் வழிப்படுத்துக.

1. சிவபாத விருதையரின் ஊர் எது?
2. அவர் செல்லும் கோயில் எது ?
3. தந்தையுடன் நானும் வருகிறேன் என அடம் பிடித்தது, யார்?
4. தந்தையார் குழந்தையை இருத்திவிட்டு என்ன செய்தார்?
5. தந்தையைக் காணவில்லை என குழந்தை பதற்றமடைவதற்குக் காரணம் என்ன?
6. குழந்தை அம்மா, அப்பா என்று அழ யார் முன் வந்தார்கள் ?
7. குழந்தைக்கு பொற் கிண்ணத்தில் பாலூட்டியது யார்?
8. யாருடைய எச்சிற்பாலைக் குடித்தாய் என தந்தையார் கேட்க குழந்தை என்ன செய்தது?
9. திருஞானசம்பந்தர் பாடிய “ தோடுடைய செவியன் “ என்ற தேவாரத்தை நாமும் பாடுவோம்.

**மெய்யன்புடன் இறைவனை வழிபட்டால் இறைவன் அருள்புரிவார் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துக.**